**ARTICLE 05 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00020**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 20–26
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# குருக்கள்பட்டி கிராமச் சிறுதெய்வ வழிபாடும் பண்பாட்டு வரலாறும்

**முனைவர் .மேனகா கு**[1,*]
[1]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம், சாராள் தக்கர் கல்லூரி(தன்னாட்சி), திருநெல்வேலி - 7, India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர் .மேனகா கு — menagarajandoss@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம், சாராள் தக்கர் கல்லூரி(தன்னாட்சி), திருநெல்வேலி - 7

**Keywords / திறவுச் சொற்கள்:** சிறுதெய்வ வழிபாடு (Folk Deity Worship); காவல் தெய்வங்கள் (Guardian Deities); முன்னோர் வழிபாடு (Ancestor Worship); குருக்கள்பட்டி (Kurukkulpatti); வாய்மொழி வரலாறு (Oral History); நாட்டார் தெய்வங்கள் (Folk Deities); ஜமீன்தார் வரலாறு (Zamindar History); வீரமாமுனிவர் (Veeramapunivar / Constanzo Beschi); எஸ்தர் அம்மையார் (Esther Ammaiyar).

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கு, மு. . (2026). குருக்கள்பட்டி கிராமச் சிறுதெய்வ வழிபாடும் பண்பாட்டு வரலாறும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

தமிழக நாட்டார் வழக்காற்றியலில் சிறுதெய்வ வழிபாடு மிக முக்கியப் பண்பாட்டு இடத்தைப் பெறுகிறது. பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து மாறுபட்டு, மக்களது அன்றாட வாழ்க்கை, எல்லைக் காவல் தேவை, முன்னோர் வழிபாடு மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளோடு பிணைந்து இச்சிறுதெய்வங்கள் இயங்குகின்றன. குருக்கள்பட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட களப்பணித் தரவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

சிறுதெய்வம் - சொல் விளக்கம்

கிராம மக்களின் வழிபாட்டுக்குரியது சிறுதெய்வமாகும்.

> "மக்கள் தம்குறை நீங்க வழிபடும், (பெரும்பாலும்) அந்தணரல்லாத பூசாரி பூஜை செய்யும் தெய்வம்"1 என்று கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

சிறுதெய்வம் என்ற சொல்லாட்சி முதன்முதலில் அப்பர் தேவாரத்தில் காணப்படுகிறது; எனவே இப்பெயர் வழக்கு 'மேலோர் மரபு' சார்ந்ததாகும்.

முதன் முதலாக "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்"2 என்று அப்பர் தேவாரத்தில் பயின்று வருகிறது; இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு.

17-ம் நூற்றாண்டில் குமரகுருபரர், "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்"3 என்று முருகனைக் குறிப்பிடுகிறார்; இப்பாடலில் செத்துப் பிறப்பவனாக அவர் குறிப்பிடுவது சிறுதெய்வங்களையே எனலாம்.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

"ஆதிக்குடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சம்தரும் நிகழ்ச்சிகளுக்கும், நோய்களுக்கும் காரணம், உலகின் கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என நம்பினர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டார்"5 என கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

சிறுதெய்வங்களின் பண்புகளும் வழிபாட்டு நோக்கங்களும்
சிறுதெய்வங்களின் பண்புகளுக்கேற்ப அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

அச்சந்தரும் இயற்கைப் பொருட்களும் நிகழ்ச்சிகளும் தெய்வங்களாக உருவாக்கப்பட்டன.

பருவத்தில் மழை பெய்யவும், பயிர் வளம் செழிக்கவும் தானாக உருவாக்கப்பட்ட சக்திகளாக விளங்குகின்றன.

நீர் நிலைகளையும், ஒவ்வொரு ஊரையும் காவல் காக்கும் சக்தியாக உருவகம் செய்து வழிபடப்படுகின்றன.

கொள்ளை நோய்கள், குழந்தைகள் மற்றும் கால்நடைகளைக் காக்கும் சக்தியாக அமைந்துள்ளன.

குலதெய்வ வழிபாடு ஊர்தெய்வ வழிபாடாகவும், பிறகு பலரும் வணங்கும் சக்தியுள்ள தெய்வ வழிபாடாகவும் பரவிச் செல்வாக்குப் பெறுகிறது.

பல்வேறு இனக்குழு மக்கள் தங்கள் இனக்குழுக்குறிகளுக்குச் (Totems) சிறுதெய்வ நிலை கொடுத்துள்ளனர்.

வழங்கப்படும் வேறு பெயர்கள்: இச்சக்திகளுக்குச் சிறுதெய்வம், குலதெய்வம், ஊர்தெய்வம், கிராம தேவதை, சிற்றுயிர் வணக்கம், காவல் தெய்வம், எல்லைத்தெய்வம் முதலிய பல பெயர்கள் வழங்கி வருகின்றன. பாமர மக்களின் உணர்வைத் தாக்கும் வலிய அரணாக இச்சிறு தெய்வ வழிபாடு விளங்குகிறது.

## வழிபடுவோரும் கோவில் அடையாளங்களும்

**வழிபடும் சமூகங்கள்:** பிராமணரல்லாத எல்லாச் சாதியினரும் சிறுதெய்வ வழிபாட்டை உடையவர்களாவர். தேவர், கோனார், நாடார், செட்டியார், இல்லத்துப்பிள்ளை, பள்ளர், பறையர், அருந்ததியர், நாவிதர், புலவர் போன்ற மற்ற சமூகத்தவர் அனைவரும் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர்.

**கோவில் அடையாளங்கள்:** சிறுதெய்வக் கோவில்கள் சிறியவை; சில இடங்களில் கட்டடமின்றி அமைவதும் உண்டு. புற்றுகளும் மரங்களும் (வேம்பு, பனை, உடை, பூவரசு) தெய்வங்களாக வழிபடப்படுகின்றன.

**திசைகளும் பீடங்களும்:** பெண் தெய்வக் கோவில்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கியும், சில கோவில்கள் கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. ஆண் தெய்வக் கோவில்கள் கிழக்கு நோக்கியே அமைவது பெரும்பான்மை மரபாகும். சிறுதெய்வக் கோவில்களில் பீடங்கள் ஒன்று அல்லது இருபத்தொன்று என்ற எண்ணிக்கையைக் கொண்டிருக்கும்.

**தெய்வங்களின் பெயரமைப்பு:** ஆண் தெய்வங்களின் பெயர்கள் பொதுவாக அய்யா, அப்பன், அடியான், சாமி முதலிய விகுதிகளோடு அமையும் (எ.கா: வெளியப்பசாமி, கருப்பசாமி, உறங்காப்புலிமாடன், பண்டுவன்சாமி); பெண் தெய்வங்கள் வடிவு அம்மன், ஈஸ்வரி அம்மன் போன்ற பெயர்களில் அமைந்திருக்கும்.

**கோவில்கள் அமையும் இடங்கள்:** ஊர் மந்தை, ஊரின் எல்லை, குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளின் வாசற்பகுதி, நெடுஞ்சாலை ஓரம் முதலிய இடங்களில் இவை அமைந்துள்ளன. இவ்விடங்கள் அனைத்தும் காவலுக்குரியவை என்பதால் பெரும்பாலான சிறுதெய்வங்கள் காவல் தெய்வங்களாகவே அமைந்துள்ளன.

## சமூகச் சூழ்நிலையும் தெய்வங்களின் தோற்ற நிலைகளும்

சாதிவெறியும் தீண்டாமையும் உச்சகட்டத்தில் இருந்த காலகட்டத்தில் சமூகக் கட்டுப்பாட்டினை மீறும்போது மனிதன் தண்டிக்கப்படுகிறான் என்ற நம்பிக்கையில் இத்தெய்வங்கள் தோன்றின என்று மொழியியல் ஆய்வாளர் செல்லமுத்து கூறுகிறார்.

சிறுதெய்வங்களின் தோற்ற நிலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

மனிதத் தலைவர்கள் தெய்வமாகக் கருதப்பட்டு அவர்களுக்குக் கோவில் கட்டி வழிபாடு செய்ய முயன்ற நிலை.

தன்னுடன் தன் காலத்தில் வாழ்ந்தவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு அவர்கள் பெயரில் கோவில் அமைத்து வழிபட்ட நிலை.

ஊர்ப்புறங்களில் வீரம் வாய்ந்து உடல்திறமையால் விளங்கியவனுக்கு அஞ்சியவர்கள், பின்னாளில் அவன் நினைவாக அச்சத்திற்குட்பட்டு அவனை வணங்கிய நிலை.

உறங்காப்புலி மாடன், போத்திமார், வெளியப்பசாமி, பண்டுவன் போன்ற தெய்வங்கள் கொலை செய்யப்பட்டும், இயற்கை மரணமடைந்தும் தெய்வங்களாக உருவெடுத்தன; இந்த முன்னோர் வழிபாடே சிறுதெய்வ வழிபாடாக அமைந்தது.

குருக்கள்பட்டி சிறுதெய்வங்களும் வாய்மொழி வரலாறுகளும்

## வெளியப்பசாமி கோவில்

வெளியப்பர் என்பவர் தேனி மாவட்டத்திற்கு உட்பட்ட 'கலாடி' கிராமத்திலிருந்து ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டு ஊரைவிட்டு வெளியேறி விட்டார். குருக்கள்பட்டிக்குக் கிழக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மேலநீலிதநல்லூர் என்ற கிராமம் வரை பெரிய காடுகள் இருந்தன. அங்கு இரண்டஞ்செடி, கிளுவை மரங்கள் அடர்ந்து காணப்பட்டதால் அக்காட்டிற்குள் யாரும் செல்ல முடியாது. அதற்குதென்று தனிவழி ஒதுக்கித்தான் போக முடியும். அவ்வளவு அடர்த்தியாக இருந்தது. அப்படிப்பட்ட அடர்ந்த காட்டிற்குள் ஒளிந்திருந்தார்களாம். அந்தப்பெண்ணின் சகோதரர்கள் பெண்ணைக் காணவில்லை என்று கூறி, பல நாட்களாக ஊர் ஊராகத் தேடி அலைந்து கொண்டிருந்தார்களாம். ஒரு நாள் குருக்கள்பட்டி கிராமத்தில் வந்து ஆடு

மேய்த்துக் கொண்டிருக்கும் இடையர்களிடம் விசாரித்தார்களாம். அவர்கள் அப்படி யாரும் இங்கு வரவில்லை, ஆனால் அதோ அந்தக்காட்டிற்குள் நடுவே ஏதோ புகை போவது போன்று தெரிகிறது என்றனராம். உடனே அவர்களும் சந்தேகத்தில் பார்க்கச்சென்றனர். இருவரும் உணவு சமைத்துக் கொண்டிருந்தார்களாம். அங்கேயும் இங்கேயும் சுற்றித்திரிந்த ஆத்திரத்தில் இருவரையும் கொலை செய்து விட்டார்களாம்.

இவர்கள் இருவரும் ஊத்துமலையிலுள்ள ஜமீன்தாரிடம் கனவில் போய் நடந்தவைகளைக் கூறிவிட்டு, எந்தப்பாவமுமே செய்யாத எங்களுக்கு இந்தக்கதியாகிவிட்டது, எனவே எங்களைக் கோவில் கட்டி வணங்கினால் நாங்கள் உங்களுக்குக் காவல்காரராக இருப்போம் என்று கூற, ஜமீன்தார் எந்த மறுப்பும் கூறாமல் உடனே 'கோவில்கட்டி' விடுவோம் என்று கோவிலைக் கட்டினார். இதன் மூலம் இக்கோவில் ஜமீன்தாரால் கட்டப்பட்டது என்பது தெரிகிறது.

இக்கோவில் குருக்கள்பட்டி கிராமத்திலேயே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். இது மாசிமாதம், சிவராத்திரி அன்று கொண்டாடப்படும் திருவிழாவாகும். இத்திருவிழாவிற்கு மதுரை, தேனி, கம்பம், நாகர்கோவில், கன்னியாகுமரி, கலாடி, சொக்காடி போன்ற பகுதியிலுள்ள அனைத்து சாதியினரும் வழிபட வருவார்கள். ஆகையால் தமிழகத்தில் பரந்துபட்ட எல்லாச் சாதியினரும் கொண்டாடும் விதமாக இத்திருவிழா அமைந்திருக்கும்.

## போத்திமார் கோவில்

குருக்கள்பட்டி ஜமீனுக்கு உட்பட்டது மேலநீலிதநல்லூர் கிராமமாகும். அங்கு தேவர், கோனார், பள்ளர், பறையர், அருந்ததியர் போன்ற சமூகத்தவர் வாழ்ந்து வருகின்றனர். அதில் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர். அனைத்து சாதியினரும் விவசாயிகளாகவும், விவசாயக்கூலிகளாகவுமே வாழ்ந்து வருகின்றனர். கோடைகாலங்களில் தொழில் இல்லாததால் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் ஜமீந்தார் அரண்மனைக்குக் காவல்காரர்களாகப் பணிசெய்து கொண்டிருந்தார்கள். அவ்வாறு பணிசெய்து கொண்டிருந்தவர்கள் ஜமீன் அரண்மனையில் உள்ள பெண்களிடம் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இச்செய்தி ஜமீந்தார் காதுக்கு எட்டவே, ஜமீந்தார் தம் அரண்மனையிலேயே தவறு செய்துவிட்டார்கள் என்று எண்ணி இவர்களை வெளியே அனுப்பினாலும் அசிங்கப்படுத்திவிடுவார்கள், அப்படியே விட்டுவிட்டாலும் மேலும் தவறு செய்வார்கள் என்று எண்ணி அரண்மனைக்குள்ளேயே பெரிய 'நிலவறை தோண்டி' (குழிதோண்டி) அதற்குள் உயிருடன் இறக்கி வைத்துப் பெரிய பாறாங்கல்லால் மூடி வைத்துவிட்டார். இப்பொழுதும் அரண்மனை 1/2 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. அந்த இடத்தை யாரும் பயன்படுத்த முடியாது. அவர்கள் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மேலநீலிதநல்லூர் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் 'பிடிமண்' எடுத்துக்கொண்டு போய் கோவில்கட்டி வழிபட்டு வருகிறார்கள்.

அந்தக் கோவிலில் ஆடு, கோழி பலி செலுத்தியும் குழந்தைகளுக்கு வாரிசுதாரர்கள் அல்லது சந்ததியார்கள் மொட்டையடித்தும் நேர்ச்சை

செய்து வருகிறார்கள். சாமியாடியும், குறி சொல்லியும் வழிபட்டு வருகிறார்கள்.

### பண்டுவன் கோவில்

பண்டுவன் என்பவர், காலத்தைக் கணித்தறிந்து தன் உயிர் உடலைவிட்டுப் பிரியும் காலத்தை உணர்ந்து தனக்குத்தானே குழி தோண்டி மரணம் எய்தும் போது குழிக்குள் இறங்கி அமர்ந்து உயிரைவிட்டார். அப்படிப்பட்டவரை அவருடைய உறவினர்கள் கோவில்கட்டி வழிபட்டு வருகிறார்கள். ஆண்டுக்கொருமுறை அனைவரும் சேர்ந்து பொங்கல் வைத்துப் படையல்கள் படைத்துச் சாமியாடியும், ஆடு, கோழி பலி செலுத்தியும் வணங்கி வருகிறார்கள். இக்கோவிலை வழிபடுபவர்களை இப்பொழுதும் பண்டுவன் கூட்டம் என்றே கூறுவார்கள். ஆண்டிற்கு ஒருமுறை அக்குடும்பத்தார்கள் மட்டும் நாள் குறித்து ஒன்றுகூடி பொங்கல் வைத்து, படையலிட்டு, சாமியாடி, ஆடு மற்றும் கோழிகளைப் பலியிட்டு வழிபடுகின்றனர்

### உறங்காப்புலி மாடன்

உறங்காப்புலி மாடன் கோவில், தேவர் சமூகத்தில் 50 குடும்பங்களுக்கு மட்டும் சொந்தமானதாகும். இக்கோவிலை வழிபடுபவர்கள் 'பூரிக் கூட்டம்' என்று அழைக்கப்படுகின்றனர். ஆண்டிற்கு, இரண்டு முறை வழிபடுவார்கள்: சித்திரை, மாசி சிவராத்திரிக்கு மறுநாள் வணங்குவார்கள்.

அந்தக்கோவிலைச் சுற்றி விவசாயம் செய்யும் இடம் அதிகமாக உள்ளது. அதனைச்சுற்றி இருக்கின்ற கிணறுகளில் களவு, திருட்டு எதுவும் நடக்காது என்று கூறுவார்கள். அப்படி திருடினால் கண் தெரியாமல் ஆகிவிடும் என்று மக்களால் நம்பப்படுகிறது. காடுகளில் விளைந்த தானியங்களை அடித்துக் காற்றில் பொதிபோட்டிருந்தால் காவலுக்கு யாரும் போகமாட்டார்கள். அப்படி இருக்கும் போது, ஒரு நாள் திருடர்கள் களத்தில் போட்டிருந்த தானியங்களை அள்ளிக்கொண்டு செல்லுகொண்டிருந்தார்கள். செல்லும் வழியில் கண்தெரியாமல் விடியவிடிய மூட்டையைக் கட்டி வைத்துக்கொண்டு அப்படியே நின்றுவிட்டார்கள். அப்படி அந்தக் காவல் தெய்வம் உறங்காமல் புலிமாதிரி காப்பதால் அந்தத்தெய்வம் உறங்காப்புலி மாடன் எனப் பெயர் பெற்றது. திருடியவர்களை இக்குடும்பத்தினர் மன்னித்து விட்டதால் இத்தெய்வத்திற்குப் பயந்து காடுகளில் திருடு போவதில்லை. இக்கோவிலில் வேளார் பூசாரியும், சில புலவர்களும் பூசை செய்கின்றனர்.

### வடிவு அம்மன் கோவில்

குருக்கள்பட்டி கிராமத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள இக்கோவில், 15 ஆண்டுகளுக்கு முன் அனைத்துச் சமூகத்தவராலும் ஒருங்கிணைந்து கட்டப்பட்டது

### மாரியம்மன் கோவில்

நாடார் சமூகத்தைச் சேர்ந்த 30 குடும்பத்தினர் இக்கோவிலை வழிபட்டு வருகின்றனர். சித்திரை (மே) மாதத்தில் 8 நாட்கள் தொடர்ச்சியாகத் திருவிழா நடைபெறும். கரகாட்டம், வில்லுப்பாட்டு, ராஜாராணி ஆட்டம், ஆன்மீகச் சொற்பொழிவுகள், ஆடல் பாடல், பாட்டுக்கச்சேரி, பட்டிமன்றம் போன்றவை நடைபெறுகின்றன. அன்னதானம், தண்ணீர்ப்பந்தல்,

மோர்பந்தல், பானக்கரம் போன்ற நேர்த்திக்கடன்களும் வழங்கப்படுகின்றன.

குருக்கள்பட்டியின் வரலாற்றுச் சிறப்புகள்

## ஜமீந்தார் வாழ்க்கை

குருக்கள்பட்டியில் ஆண் ஜமீந்தார்கள் வாழவில்லை; 'நாச்சியார்' என்ற அம்மையாரே வாரிசு இல்லாததால் ஆட்சி புரிந்துள்ளார். இவரை ஊத்துமலை ஜமீன் இருதலையமருதுபாண்டியனுக்குத் திருமணம் செய்ய முயன்றபோது மறுத்துவிட்டார். உடனே குருக்கள்பட்டி மக்கள் 'குருட்டுக்கம்பில்' தாலிகட்டி, 500 பேருடன் உரல் உள்ளிட்ட சீர் வரிசைகளைச் சுமந்து ஊத்துமலைக்குச் சென்ற வரலாற்றுச் செய்தி அறியப்படுகிறது.

ஆராய்ச்சிபட்டி, ஆயாள்பட்டி, மடத்துப்பட்டி, வெங்கடாசலபுரம், பெரும்பத்தூர், தடியம்பட்டி, நரிக்குடி, கருப்பனாத்து, பனவடலிச்சத்திரம், வன்னிக்கோனேந்தல், தேவர்குளம், ஊத்துமலை, குருக்கள்பட்டி, கிருஷ்ணாபுரம், மருதப்பபுரம், ரெட்டியாபட்டி, முத்துக்கிருஷ்ணாபுரம், ஜமீன்இலந்தைக்குளம் அஜமீன் கட்டுப்பாட்டில் இருந்த 18 கிராமங்கள்: ஆகும்.

## வீரமாமுனிவர்

இயற்பெயர் 'பெஸ்கி' கொண்ட வீரமாமுனிவர் ஊர் ஊராகச் சென்று கிறித்தவ மதத்தைப் பரப்பியபோது குருக்கள்பட்டி கிறித்தவக் கோவிலில் தங்கியிருந்தார். பிற சமயத்தவர்களின் ஒழுங்கைக் கண்டு தாமும் காவி உடையணிந்து தாடியுடன் இந்து துறவி போல் மாறித் தமிழில் வீரமாமுனிவர் எனப் பெயர் வைத்துக்கொண்டு பணியாற்றினார். நிலங்களை வாங்கி கிணறு தோண்டி வேளாண்மை செய்தார். தேவர் சமூகத்தினர் மதம் மாறினால் சலுகைகள் பெறலாம் என எண்ணிப் பேசியபோது, இறைவனுக்குச் சொந்தமானதை யாரும் அனுபவிக்கக் கூடாது என மறுத்ததால் அவரை ஊரை விட்டுத் துரத்திவிட்டனர். அவர் இருந்ததற்கான ஆதாரமாக R.C. கத்தோலிக்க நிர்வாகக் கட்டடமும், இடி கிணறும் அங்கு உள்ளன.

## எஸ்தர் அம்மையார்

குருக்கள்பட்டி கிராமத்தில் கோனார் சமூகத்தைச் சேர்ந்த பொன்னையா - சண்முகத்தாய் தம்பதியருக்கு இரட்டைக் குழந்தைகளாக பிறந்தவர்களில் ஒருவர் இராமாத்தாள் (எஸ்தர்). வறுமையால் சங்கரன்கோவில் வடமலாபுரம் 'பிரதரன் மிஷின்' ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டு, டாக்டர் ஆலிவர் மற்றும் லண்டன் செவிலியர் மெக்ரேக்கர் உதவியால் படித்தார். C.S.I நிர்வாகம் மூலம் மதுரை மிஷினரி கல்லூரியில் செவிலியர் படிப்பு முடித்துக் கிறித்தவ மதத்திற்கு மாறி எஸ்தர் எனப் பெயர் பெற்றார். பின்னர் 1966-இல் கிராம நிர்வாக அதிகாரி சண்முகவாத்தேவர், ஊராட்சித் தலைவர் முத்துப்பாண்டியன் மற்றும் மெக்ரேக்கர் உதவியுடன் சொந்தச் செலவில் 34 சென்ட் இடம் வாங்கி மருத்துவமனை கட்டினர். எஸ்தர் அம்மையார் 5000-க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்குப் பிரசவம் பார்த்துள்ளார்.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## முடிவுரை

குருக்கள்பட்டி கிராமச் சிறுதெய்வ வழிபாடு என்பது மக்களின் அச்சம், மரியாதை, முன்னோர்களின் நினைவேந்தல், காவல் தேவை மற்றும் சமூக ஒற்றுமையின் வெளிப்பாடாகத் திகழ்கிறது. சாதியக் கட்டமைப்புகள் நிலவிய காலத்திலும், வழிபாட்டின் வழியாகக் கிராமியக் கலைகளையும் கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாத்த நாட்டார் பண்பாட்டு வரலாற்றை இக்கட்டுரை உறுதிப்படுத்துகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, ப-439
2. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப-123.
3. மேலது, பக்.123
4. கலைக்களஞ்சியம், 5ஆவது, ப-451.
5. ச.அகத்தியலிங்கம் (ப.ஆ), ஆய்வுக்கோவை (தொகுதி.2) ப.641.
6. வே.சண்முகை, வயது 58, விவசாயம், குருக்கள்பட்டி.
7. செ.தங்கவேலு, வயது 45, விவசாயம், குருக்கள்பட்டி.

## துணைநூற் பட்டியல் (References)


1. கிரியாவின் தற்காலத்தமிழகராதி, 48 எண் 4,24, கிழக்கு தெரு, சென்னை,1972.
2. பரமசிவன்.தொ,பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2001.
3. கலைக்களஞ்சியம்,தொகுதி-5,தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை,1959.
4. அகத்தியலிங்கம் (ப.ஆ.), 27ஆம் கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, இந்தியப்பல்கலைக்கழகம்,தமிழியல்துறை,புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 1998.


© 2026 முனைவர் .மேனகா கு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..